**செ.வெ.எண்: 07** **நாள்:02.10.2018**

# அரியலூர் கோதண்ட ராமசாமி திருக்கோவிலில் சமபந்தி பொது விருந்து.

அரியலூர் மாவட்டம், அரியலூரில் **அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை** முன்னிட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் **கோதண்டராமசாமி கோவிலில்** இன்று (02.10.2018) நடைபெற்ற **சமபந்தி பொது விருந்து நிகழ்ச்சியில்** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராமேஜந்திரன்** அவர்கள் மற்றும் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் கலந்துகொண்டார்கள்.

ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆலயங்கள் தோறும் அன்னதானம் எனும் திட்டத்தின்கீழ் அன்னதானம் வழங்க உத்தரவிட்டுள்ளார். அரியலூர் மாவட்டத்தில் அருள்மிகு ஆலந்துரையார் கோதண்டராமசாமி திருக்கோயில், திருமானூர் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், திருமழப்பாடி அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், கங்கைகொண்ட சோழபுரம் அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலயம், கல்லங்குறிச்சி அருள்மிகு கலியுக வரதராஜ பெருமாள் திருக்கோயில்களில் நாள்தோறும் அன்னதானம் நடைபெற்று வருகிறது. **அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை** முன்னிட்டு இன்று சிறப்பு உணவு ஏற்பாடு செய்யப்பட்டு, வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், துணை ஆட்சியர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை) கதிர்சங்கர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பரிதாபானு மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**